அசல்

பரிதிவாணன்

அசல் – 1   நகல் – 1

பதிலை

உ

சிவமயம்   7/1/40

மகாகனம் பொருந்திய ஸ்ரீமான் ஐயரவர்கள் பொற்
பாதங்களில் அடியேன் பரிதிவாணன் சாஷ்-
டாங்கமாய் நமஸ்கரித்து விஞ்ஞாபனம்

க்ஷேமம். தங்களுடைய அன்பை
அன்பு ஆசீர்வாதங்களை நினைத்துக் கடிதம் வரப்
பெற்று ஆநந்தமடைந்தேன் – உங்களுடைய
தெளிவாகவும் உண்மையான விசேஷங்களைத் தெரிவித்த
நன்றியாக்கிறேன். தங்களுடைய கடிதத்தை
நிதியாக வைத்துக் கொண்டேன்.

தங்களுடைய தேக சௌக்கியம்
எவ்வாறிருக்கிறது. தாங்கள் அநேக
நாட்களாய் நின்ற காலம் முதல்
பொருட்டு தமிழுக்கு உபகாரம் செய்து வரு-
கிறது போல வேறு யாரும் செய்தார்களா
என்று சொல்லும் என்னுடைய மனம்
யாருடைய பார்த்தேன். 2, 3 மாதங்களாய்
தாங்கள் செய்யும் வேலைகளைப் பற்றி-
க்கொள்ள அதையும் செய்யும்படித் தங்கள்
பாக்கியத்தினால் உடல் நலத்தைக் கண்
உண்டாகிறது. அப்படிச் செய்ய வேண்டுமென்று
பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன்.
எனக்கு இந்தக் கடிதத்தின்
மேலாமாகத்தில் தமிழ் வாழ்த்தானது

அசல்

ஸ்ரீநிவாஸன்

அசல் - 1 நகல் - 1

இராவணனைப் [illegible] பணிந்தது அவனுடைய இராம[illegible]
தமிழ்நாட்டு[illegible] ஸ்ரீராமபாணம் [illegible]
[illegible] ? ஸ்ரீராமபாணம் வந்து [illegible] கொண்டதாயுடன் ஜனங்க-
ளும் முதலிய [illegible] இராம[illegible]
[illegible] வால்மீகி பகவானுடைய ராமாயணத்தால் [illegible]
[illegible] பணிந்தது [illegible]
[illegible]
[illegible] ஸ்ரீராம[illegible]
[illegible] - இராவணன் [illegible]
[illegible] - [illegible] இராமனை [illegible]
[illegible] இராவணனை [illegible] - [illegible] பணிக்கப்
[illegible] - [illegible]
[illegible] இராவணன் [illegible] பணிந்ததெப்படி ? ராமாயணத்தில்
[illegible]
அந்த [illegible]
[illegible] ? [illegible]
[illegible] கேட்டுக்கொள்ளுகிறேன் .

[illegible]
[illegible] பிரார்த்தித்த

அடியேன்
ஸ்ரீநிவாஸன் .

அசல்

பந்திவாலன்

அசல் - 1 நகல் - 1

[illegible]

[illegible] வெங்கட ராமையவர்கள் [illegible]

[illegible]

நகல்

சிவமயம்.

மகாகனம் பொருந்திய ஸ்ரீமான் ஐயரவர்கள் பொற்பாத கமலங்களில் அடியேன் ஸ்ரீநிவாஸன் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து விக்ஞாபனம்.

க்ஷேமம். தங்களுடைய அருமை அன்பு ஆசீர்வாதமிவைகள் நிறைந்த கடிதம் வரப் பெற்று ஆநந்த மடைந்தேன். ஊக்கங் குறை கிற தென்பதனை உண்மையான உபசேடனைத் தவிட்டு எழுதியிருக்கிறேன். தங்களுடைய கட்டளைக்கும் கீழ்ப்படியக் கடமைப்பட்டவன்.

தங்களுடைய தேக சௌக்கியம் எல்லா வற்றிலு முக்கிய மானது. தாங்கள் ஆரோக்கிய திட காத்திரர்களாய் நீண்டகால மிருந்து இப் பொழுது தமிழுக் குபகாரம் செய்து வந்திருப்பது போல மேலு மேலும் செய்து கொண்டு வர வேண்டுமென்பது என்னுடையவும் மற்று யாவருடையவும் பிரார்த்தனை. 2, 3 மாத காலம் தாங்கள் செய்யும் வேலைகளை விட்டு நீங்கினவர்களாய் ஏதோ யாத்திரை செய்யும் பக்ஷத்தில் பாலியத்திலிருந்த பலம் ஊக்க முதலியவைகள் உண்டாகிவிடும். அப்படிச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்கெழுதிய கடிதத்தின் மேல்வி லாசத்தில் தமிழ் வித்துவானென்று எழுதியிரு க்கக் கண்டேன். எனக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்து வித்துவானாக ஏற்பாடு செய்வதற் கு முன்னம் என்னை வித்துவானென்று சொல்லுவது எவ்வாறு பொருந்தும்.

ராவ்பகதூர் சின்னசாமிப் பிள்ளையவர்கள் நட்பை நான் மிகவும் விரும்பியுள்ளேன். அ வர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். த மிழிலும் நல்லஞானமுடையவரென்று தெரி கின்றது.

மகா. ள. ள. ஸ்ரீ வெங்கடராமய்யரவர்கள் நட் பைப் பெருந்தனமாக வைத்துக் கொண்டிரு க்கிறேன். அவர்கள் சென்னைப்பட்டணத்தி

லிருப்பதாலெனக்கு அநேக உபகாரங்களைச் செய்யக் கூடும். ஜ்வரம் வந்த நாளாய்த்தேபலம் எனக்குக் குறைவாய் இருப்பதால் வெங்கட ராமய்யரவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதித் தொந்தரவு செய்யாமலிருந்தேன்.

கிராம புராணமுறை தங்களுக்குச் சாவகாசமிருக்கிற காலத்தில் ஒருவரைக் கொண்டு பிரதிசெய்தனுப்பும்படி செய்தால் நலம். பிரதிசெய்பவர்களுக்குத் தங்களபிப்பிராயப்படி திரவியங் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்.

ஐந்திர எண்ணும் பதத்தினர்த்தத்தைப் பற்றி யெழுதிய வியாசத்தை யச்சிடாமல் திருப்பியனுப்பும்படி செந்தமிழ்ப் பத்திராதிபரவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். வந்தவுடன் தங்கள் பார்வைக் கனுப்புகிறேன்.

நச்சினார்க்கினியரவர்கள் இராவணனை யகத்தியர் கந்தருவத்தாற் பணித்து அவனும் இராக்கதர்களும் தமிழ்நாட்டிலியங்காமல் போக்கினரென்ற கதை ஸ்ரீராமபிரான் தென்றிசை நோக்கி வந்ததற்கு முன்னோ பின்னோ? ஸ்ரீராமபிரான் வந்த பொழுது தண்டகாரணியம் ஜனஸ்தானம் முதலிய தென்னாட்டிலுள்ள இடங்கள் இராக்கதர் வசிக்குமிடங்களாயிருந்தனவென்று வால்மீகி பகவானது ராமாயணத்தால் தெளிவாய்த் தெரிகிறது.

கந்தர்வத்தால் பணித்தது அதற்கு முந்தியென்று நினைப்பதற்கிடமில்லை. மேலும் ஜனஸ்தான வாசிகளாயிருந்த கரதூஷணர்களை மாளும்படி செய்ய அகத்திய முனிவர்தான் ஸ்ரீராமனுக்குதவி செய்தனுப்பினாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. இராவணன் கோதாவரி தீரத்திற்கு வந்து ஸீதாபிராட்டியைத் தூக்கிக் கொண்டு போய்விட்டான் — உடனே ராமராவண யுத்தம் நேரிட்டது இராவணன் மாண்டான் — யாருக் கந்தர்வத்தாற் பணித்

நகல்

கப்பேர்வழியில்லை - யுத்தத்துக்கு முந்தியு
மில்லை பிந்தியுமில்லையென்றால் அகத்திய
ரிராவணனைக் கந்தர்வத்தாற் பணித்தது
எப்போ? ராமாயணத்திற் கண்ட சங்கதி
களுக்கு நேர் விரோதமாய் ஒருகதையைக்
கல்பித்து அதற்கு ஆதாரமாய்த் தன்னை
யே - மேற்கோளாகக் காட்டி யெழுதுவது
ஏற்றுக் கொள்ளக் கூடுமா? சமாதானமி
ருந்தால் அதையெனக்குத் தெரிவிக்கும்படி
கேட்டுக் கொள்ளுகிறேன்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாள
னென்பதற்கிலக்காயிருந்து தமிழ்நாட்டுக்கு
ப் பேருதவி புரிந்து வரும் மூர்த்திக்கு,

அடியேன்,
ஸ்ரீநிவாஸன்.

நகல்

24

க)

1917

[illegible]

~~7-1-40~~

Page 730 [illegible]

Page 730 to 734.

F 349-354

(95)